மு. எம். சுப்பிரமணியன்


Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0; பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0; வெளிநாடு ரூ. 7-0-0

[illegible] 19 } ஈரோடு 24-8-1946 ஆவணி 8உ { மலர் 46


## தீண்டாமை இந்துமதத்திற்குச் சாபக்கேடா? உயிரா?

★

"இந்துமதத்திற்குச் சாபக்கேடு தீண்டாமையே யாகும்" என்று காந்தியார் அடிக்கடி சொல்லுவார். இப்படி அவர் சொல்லுவதின் உள் அந்தரங்கமென்னவென்றால் இந்துமதத்தைக் காப்பாற்றுவதேயாகும். காந்தியார் உண்மையாளராகவோ அல்லது அறிவுடையவராகவோ இருப்பாரானால், இந்துமதம் இல்லாவிட்டால் தீண்டாமை இருக்காது என்பதையும், தீண்டாமை இல்லாமல் போய் விடுமானால் இந்து மதம் இருக்க முடியாது என்பதையும் தெரிந்துகொண்டிருப்பார். தீண்டாமையைக் காப்பாற்ற இந்துமதம் இருக்கிறதே ஒழிய இந்து மதத்தைக் காப்பாற்றவோ இந்து மதத்திற்குச் சாபக்கேடாகவோ தீண்டாமை இருக்கவில்லை. ஏனெனில் உலகில் எந்த பாகத்திலும் தீண்டாமை இல்லாத இடத்தில் இந்துமதம் இல்லை என்பதும், இந்துமதம் இல்லாத இடத்தில் தீண்டாமை இல்லை என்பதும் யாவரும் அறிந்ததேயாகும். இந்துமதம் என்பதாக ஒரு குறிப்பிட்ட கொள்கைகொண்டமதம் இருப்பதாக எவரும் எங்கும் காட்டமுடியாது. ஆனால் தீண்டாமை பிறவி ஜாதி வேற்றுமை ஏற்படுத்தி அவைகளைக் காப்பாற்றவும், இழிவுபடுத்தும் மக்களையும், இழிவு படுத்தப்பட்ட மக்களையும் ஒரு சமுதாயத்தில் சேர்த்து ஒழுங்குப்படி பத்திரமாய் அவ்விரண்டு தன்மையையும் வலியுறுத்தி அனுபவத்திலிருக்கவும் ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சிக்குத்தான் இந்துமதம் என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர இந்துமதம் என்பதாக ஒரு மத ஸ்தாபகம் எப்போது யாரால் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்ல இடமும் உண்மை ஆதாரமும் இல்லை, இல்லவே இல்லை. ஆதலால் தீண்டாமை ஒழிந்த இந்துமதமோ, இந்த மதம் இருக்க தீண்டாமை ஒழிவது என்பதோ முடியாத காரியமாகும்.

தீண்டாமை ஒழிந்துவிட்டால் இந்துமதத்தைக் காப்பாற்றவேண்டிய அவசியம் எவருக்குமே இருக்காது. தீண்டாமை ஒழிந்துவிட்டால் இந்துக்கள், இஸ்லாம், கிறிஸ்து, பிரம சமாஜம், ஜீவகாருண்ய சமாஜம், சமரச மார்க்கம் என்பனவாதிய மதங்களில் ஏதாவது ஒன்றில் இணைந்துவிட வேண்டிவருமே அல்லாமல் இந்து என்று சொல்லிக்கொள்ள இடமும் அவசியமும் இருக்கவே இருக்காது என்போம்.

"இந்துமதத்தில் பல கடவுள்கள் இருக்கின்றனவே, அவை வேறு எந்த மதத்திலும் இல்லையே, ஆதலால் பல கடவுள்கள் இருக்கவேண்டும் என்பதற்காகவாவது இந்துமதம் என்பதாக ஒன்று இருக்குமே" என்று சிலர் சொல்லலாம். பல கடவுள்களும் தீண்டாமை, ஜாதிபேதம் என்கின்ற அடிப்படையின் மீது கற்பிக்கப்பட்டவைகளே ஒழிய இந்த மதத்திற்கென ஜாதிபேதமற்ற ஒரு கடவுள் இல்லவே இல்லை.

ஜாதிபேதம், தீண்டாமை ஆகியவை ஒழிந்தவுடன் அதில் பட்ட பல கடவுள்களும், அவற்றின் தன்மை ஆதாரம் யாவும் அடிபட்டுப் போய் விடுமாதலால் பல கடவுள் கொள்கைக்கு இடமில்லை என்பதோடு அதற்காக ஒரு மதமும் தேவை இருக்காது என்றே சொல்லுவோம்.

ஆகவே இந்துமதம் என்பது ஜாதிபேதத்தால் பயனடைந்து அன்னியர்களை அடக்கி அடிமைப்படுத்தி வைத்து நோகாமல் ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும்— சுகபோகம் அனுபவிக்கும் ஒரு வஞ்சக சோம்பேறிக் கூட்டத்தினரின் கற்பனை ஆயுதமேயாகும்.

## பதிவுத் திருமணம்

1-9-46 காலை 9-மணிக்கு சென்னை மூலக்கொத்தளம் பெரியபாளையத்தம்மன் கோவில் 2வது தெரு, 2ம் எண்ணுள்ள இல்லத்தில் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களின் தலைமையில் தோழர் ஈ. துரைசாமி அவர்களுக்கும், தோழியர் பங்கஜம்மாளுக்கும் பதிவுத் திருமணம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., க. அன்பழகன் எம். ஏ., சி. தங்கராஜ், வி. வி. முருகேச பாகவதர், என். வி. நடராசன் ஆகிய தோழர்களும் திருமணத்தில் கலந்துகொள்வார்கள்.

## பிறப்பு

27-7-46ல் ஈரோடு, பெரிய அக்கிரகாரம் தோழர் ஆர். நாராயணசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியாகிய தோழியர் முத்து இலக்குமி அவர்கள் ஒரு பெண்மகவை ஈன்றெடுத்ததின் நினைவாக குடியரசு, விடுதலை, திராவிடநாடு ஆகிய செய்தித்தாள்களுக்குத் தனித்தனியே மூன்று ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

# இதுதானா ஜனநாயக ஆட்சி?

(சீனி. வேங்கடசாமி)

ஜனநாயகம், ஜனநாயகம் என்னும் பேச்சு எங்கும் பேசப்படுகிறது. பத்திரிகைகளிலும் மேடைகளிலும் எழுதியும் பேசியும் வருகிறார்கள். ஆனால் செயலில் ஜனநாயகத்தைக் காணோம். வெற்றுப் பேச்சும் வெறும் எழுத்துமாகத்தான் இருக்கிறது நமது நாட்டு ஜனநாயகத்தின் இலட்சணம் இது.

இந்தியா ஒழிந்த மற்றச் சுதந்தர நாடுகளில், ஜனநாயகம் மேடைப் பேச்சிலும் ஏட்டுச்சுவடியிலும் மட்டும் அல்ல; செயலிலேயும் நடைமுறையிலேயும் இருந்து வருகிறது.

ஜனநாயக ஆட்சி என்றால் என்ன? மக்கள் எல்லோருக்கும் அரசாட்சியில் பங்கு இருக்கவேண்டும். அதுதான் ஜனநாயக ஆட்சி என்பது. எல்லா மக்களுக்கும் அரசாட்சியில் பங்கு இருக்கவேண்டும் என்றால் என்ன? எல்லோருக்கும் வாக்கு (ஓட்டு) சுதந்தரம் இருக்கவேண்டும் என்பதுதான். நாகரீகம் பெற்று சுய ஆட்சியுடன் இருக்கும் நாடுகளில் ஜனநாயக ஆட்சி உண்டு; அதாவது அங்குள்ள எல்லோருக்கும் வாக்குரிமை உண்டு. வயதுவந்த ஆண்பெண் எல்லோருக்கும் வாக்கு உரிமை எங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் ஜனநாயக ஆட்சி உண்டு.

நமது நாட்டை ஆங்கிலேயன் ஆண்டு வருகிறான். அவனுடைய இங்கிலாந்து தேசத்திலே ஜனநாயக ஆட்சி உண்டு. அதாவது இங்கிலாந்தில் எல்லோருக்கும் வாக்குரிமை உண்டு. ஆனால், அவன் ஆளுகிற இந்தியாவில் ஜனநாயகம் இல்லை. பணக்காரர்களுக்கும், படித்தவர்களுக்கும்தான் வாக்குரிமை உண்டு. நமது நாட்டில் பணக்காரர்கள் மிக மிகக் குறைவாயுள்ளனர். ஏழைகளோ கோடிக்கணக்கிலுள்ளனர். படித்தவர்களோ மிகச்சுருக்கம். நூற்றுக்குப் பத்துப்பேர்தான் படித்திருக்கிறார்கள். படிக்காத தற்குறிகளோ மிக ஏராளம். 100க்கு 90 பேர் படிக்காதவர்கள். சொற்ப எண்ணிக்கையுள்ள படித்தவர்களும் பணக்காரர்களும் ஆகிய இவர்களுக்கு மாத்திரம்தான் நமதுநாட்டில் வாக்கு உரிமை உண்டு. பெருந்தொகையினரான மக்களுக்கு வாக்குரிமை இல்லை.

நமது நாட்டில் வாக்குஉரிமை உள்ளவர்கள் தொகை நூற்றுக்குப் பதினைந்து பேர். ஓட்டு இல்லாதவர் தொகை நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் அதாவது நமதுநாட்டில்15பேருக்குத்தான் ஜனநாயக உரிமை உண்டு மற்ற 85 பேருக்கு ஜனநாயக உரிமை இல்லை! வேறுவிதமாகச் சொல்லுவது என்றால் 15பேர் 85பேரை ஆட்சி செய்கிறார்கள்! என்று சொல்லவேண்டும். இதைக்கண்டுதான் ருஷிய பத்திரிகை ஒன்று சமீபத்தில் இந்தியாவில் உள்ள ஆங்கில ஆட்சியைக் கேலிசெய்து எழுதியது. நூற்றுக்குப் பதினைந்துபேர் மட்டும் ஓட்டுரிமைபெற்ற இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நடக்கிறது என்றால் அதை எப்படி நம்பமுடியும் என்று அப்பத்திரிகை கேட்கிறது.

நமது நாட்டை ஆட்சி செய்கிறவர்கள் ஆங்கிலேயர். இந்த ஆட்சியில் ஜனங்கள் தங்கள் கருத்தை அரசாங்கத்துக்கு எடுத்துக்கூற அதிகாரம் இல்லை. நூற்றுக்கு 15-பேர் ஆக உள்ள பணக்காரர்களுக்கும் படித்தவர்களுக்கும் மட்டும்தான் இந்த அதிகாரம் உண்டு. 100க்கு 85பேராக உள்ள பெரும்பான்மையான மக்கள் ஓட்டுரிமை இல்லாமல் ஆடுமாடுகளைப்போல இருக்கிறார்கள். இது ஜனநாயக ஆட்சியா? யதேச்சாதிகார ஆட்சியா?

இந்த நிலையை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பல கூட்டங்களில் அடிக்கடி சொல்லிவருகிறார் ஆனால், மக்கள் இது விஷயத்தில் இன்னும் கிளர்ச்சி செய்யாமல் இருக்கிறார்கள். வயதுவந்த ஆண் பெண் எல்லோருக்கும் வாக்கு உரிமை கொடுக்கவேண்டும் என்னும் கிளர்ச்சியைப் பொதுஜனங்கள் செய்வார்களானால் கட்டாயம் அந்த உரிமை கிடைக்கும். வெள்ளைக்காரன் மூட்டை கட்டிக்கொண்டு கப்பலேறுகிற இந்தச் சமயத்தில், "பாரத தேவியின்" புதல்வர்கள் ஆட்சிசெய்யும் இந்த நாளில் கிளர்ச்சிக்கு ஆதரவு இருக்குமேதவிர எதிர்ப்பு இருக்காது. வயதுவந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை (Adult Franchise) வேண்டாம் என்று எந்தத் தேசபக்தனாவது சொல்ல முடியுமா?

வெள்ளைக்காரன் இந்தியாவுக்குச் சுதந்தரம் கொடுத்துவிட்டானாம். இந்தியாவின் புதிய அரசியல் அமைப்பைப்பற்றி ஆலோசிக்கப் போகிறார்களாம். இந்த நல்ல வேளையில், எல்லோருக்கும் ஓட்டுரிமை கிடைக்குமா? இந்தியாவில் உண்மையான ஜனநாயகம் ஏற்படுமா? பொதுஜனங்கள் விரும்பினால் இது முடியும். இதில் கட்சி வித்தியாசம் பாராட்ட வேண்டியதில்லை. முஸ்லிம் லீகினரானாலும் காங்கிரஸ்காரர்களானாலும் திராவிடர் இயக்கத்தினரானாலும் எல்லோரும் இதை ஆதரிப்பார்கள். வாக்குரிமை வேண்டாத முஸ்லிம் உண்டா? வாக்குரிமை வேண்டாத தேசியத் தோழர்கள் உண்டா? ஓட்டுரிமை வேண்டாத ஆதிதிராவிடர் உண்டா? ஓட்டுரிமை வேண்டாத தொழிலாளிகள் உண்டா? ஓட்டுரிமை வேண்டாத திராவிடர்கள் உண்டா? ஆகவே எல்லோரும்சேர்ந்து முயற்சி செய்தால் இதனைக் கட்டாயம் பெறலாம். பதினைந்து பேர் சேர்ந்துகொண்டு எண்பத்தைந்துபேரை ஆளுவதா ஜனநாயகம்?

## திருமணம்

10-7-46ல் காரைக்குடியில், மண்ணச்சநல்லூர் தோழர் ம. இராமநாதனும், காரைக்குடி தோழியர் இராசாத்தியம்மாளும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதின் நினைவாகக் குடியரசு, திராவிடநாடு ஆகியவற்றிற்கு முறையே ஒவ்வொரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

## விற்பனைக்கு

"பார்ப்பனப் படுமோச விளக்கம்" என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப்பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

# இந்திய சுதேச சமஸ்தானங்கள்

[3–8–46 "குடி அரசின்" தொடர்ச்சி]

பொதுவாகப் பார்க்கப்போனால் ஐரோப்பிய அரசர்கள் தங்கள் வரும்படிக்கும், தாங்கள், தங்கள் சொந்தச் செலவுக்கும் எடுத்துக்கொள்ளும் தொகைக்கும், இந்திய சமஸ்தான அரசர்கள் வரும்படிக்கும் அவர்கள் தங்கள் சொந்த செலவுகளுக்கு எடுத்துக்கொள்ளும் தொகைக்கும் வித்தியாசத்தையும், மற்ற விஷயங்களையும் கணக்குப் பார்த்தால் இந்த சமஸ்தானங்களையும், சமஸ்தானாதிபதியும் பாதுகாக்கச் சட்டம்வேண்டுமா அல்லது மாற்றவோ, கவிழ்க்கவோ சட்டம் வேண்டுமா என்பது நன்றாய் விளங்கும்.

அதற்காகவே சில புள்ளி விபரங்களை கீழே தருகிறோம். இது சர்க்கார் கணக்கேயாகும். அதாவது:-

தனது தேசமொத்த வரும்படியில் இங்கிலாந்துதேச ஜார்ஜ் அரசர் 1600ல் ஒரு பங்கும், பெல்ஜியம் அரசர் 1000ல் ஒரு பங்கும், நார்வே அரசர் 700ல் ஒரு பங்கும், நாதர்லேண்ட் அரசர் 600ல் ஒரு பங்கும், இட்டாலி அரசர் 500ல் ஒரு பங்கும், ஜப்பான் சக்கிரவர்த்தி 400ல் ஒருபங்கும்தான் தங்கள் சொந்தசெலவுக்குப் பெறுகின்றார்கள்.

ஆனால் இந்திய சமஸ்தானாதிபதிகளோ என்றால், தங்களது மொத்த ரெவினியூ வரும்படியில் திருவாங்கூர் மகாராஜா 17ல் ஒரு பாகமும், மைசூர் மகாராஜா 14ல் ஒரு பாகமும், ஹைதராபாத் நவாப் 13ல் ஒரு பாகமும், பரோடா மகாராஜா 12ல் ஒருபாகமும், காஷ்மீர் மகாராஜா 5ல் ஒரு பாகமும், பிக்கானியர் மகாராஜா 4ல் ஒரு பாகமும், இன்னும் சிலர் 3ல் ஒரு பாகமும், சிலர் 2ல் ஒரு பாகமும் தங்கள் சொந்த செலவுக்கு எடுத்துக்கொண்டு அக்கிரமமான போக்கியங்களை அனுபவிக்கிறார்கள். ஆதலால் இந்திய சமஸ்தானாதிபதிகளின் ஆட்சிகளென்பவை ஒரு பக்கா முதலாளித்தன்மை ஆட்சிகளென்பதில் யாருக்குமே ஆட்சேபனை இருக்காது. இவர்களுக்கு ஏழைமக்கள் சரீரத்தால் கஷ்டப்பட்டு வாழும் தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் வாழ்க்கையைப்பற்றியோ அவர்களது மனிதத்தன்மையைப்பற்றியோ ஒரு சிறிதும் ஞாபகமோ கவலையோ இருக்க இடமுமில்லை.

இந்த ராஜாக்கள் என்பவர்கள் ஒரு வித சுகபோகங்களை அனுபவிக்கவே தோன்றியவர்கள் என்றும் அவர்களது பிறப்பும் பதவியும் ஏதோ முன் ஜென்ம கர்ம வசத்தால், புண்ணியத்தால், பூஜா பலத்தால் கிடைத்தது என்றும் சொல்லப்படுகின்றதே தவிர மற்றபடி அவர்களுக்கு ஆட்சியிலிருக்கும் பொறுப்பு என்ன, தங்கள் நடவடிக்கைகள் எப்படியிருக்கவேண்டும் என்பனவாகியவைகள் தெரியவேதெரியாது. இந்த லட்சணத்தில் இந்த சுதேச சமஸ்தானாதிபதிகளாகிய ராஜாக்கள் தெய்வ அம்சம் பொருந்தியவர்களென்றும், விஷ்ணு அம்சமே உலகில் அரசனாய் அவதரிக்கின்றது என்றும் சொல்லப்படுவதோடு ஒவ்வொரு ராஜாங்கமும் ஒவ்வொரு கடவுளுக்குச் சொந்தமானதென்றும், அக்கடவுள்களின் பிரதிநிதிகளாகவோ, தாசர்களாகவோ இருந்து இந்த ராஜ்யங்கள் அரசாளப்படுகின்றன என்றும் சொல்லிக்கொள்ளவும் படுகின்றன.

இந்தப்படியெல்லாம் ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும் சோம்பேறிக்கூட்ட பார்ப்பனர்கள் கற்பித்திருக்கும் அந்தப்படி பிரசாரமும் செய்து எப்படிப்பட்ட கொடுங்கோன்மை ஆட்சியிலும் தாங்கள் மாத்திரம் நோகாமல் சரீரத்தால் எவ்விதப் பாடும்படாமல் சோம்பேறி வாழ்க்கையை நடத்திக்கொண்டு அவ்வயோக்கிய அரசர்களுக்கு அடுத்தபடியில் இருந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

நமது தேசபக்தர்களுக்கோ, தேசியவாதிகளுக்கோ, தேசிய தலைவர்களுக்கோ இவைகளையெல்லாம் பற்றி ஒரு சிறிதுகூட கவலையே கிடையாது. அவர்களுக்கு 'அன்னியன் ஏன் நமது தேசத்தை ஆளுகிறான், வைசிராய்க்கு ஏன் இவ்வளவு சம்பளம், இவ்வளவு அதிகாரமேன்" என்கின்ற பல்லவியும் பேச்சும்தான் தெரியுமேயொழிய வேறு ஒன்றையும்பற்றிய விபரமும் தெரியாது, கவலையே கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். தேசிய பத்திரிகைகளோ பெரிதும் இம்மாதிரி ராஜாக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்களையும் அவர்களது நிர்வாகத்தையும் புகழ்ந்து எழுதுவதும், பணம் கொடுக்காதவனை வைவதும் தவிர வேறொரு கவலையும் கொள்வதில்லை.

மேல்கண்ட யோக்கியதை கொண்ட ராஜாக்கள் தங்கள் சமஸ்தானங்களைப் பாழாக்கி தம் நாட்டு மக்களை மிருகங்களாகப் பாவித்து அக்கிரம, அனியாய ஆட்சி புரிவதை உலகம் அறிந்திருக்கும்போது தாக்குறைச்சு இந்த "தர்ம ராஜாக்களை" பிரிட்டிஷ் இந்திய ஆட்சியிலும் கொண்டுவந்து கலக்கி அதுவும் எப்படி என்றால் அவர்களைப்பற்றியும், அவர்கள் தேசத்தைப்பற்றியும், அவர்கள் நிர்வாகத்தைப்பற்றியும், பேச நமக்கு எவ்வித அதிகாரமில்லாமலும், நம்ம தேச ஆட்சியின் தலையில் அவர்கள் வந்து உட்கார்ந்துகொண்டு ஆதிக்கம் செலுத்தும்படியாகவும் கொள்கைகொண்ட சமஷ்டி (பிடரல்) ஆட்சியைக் காங்கரசாரும், அவர்களின் ஏகதலைவரான "மகாத்மா"வும் ஒப்புக்கொண்டு அதைப்பற்றி ஆட்சேபிப்பதில்லை என்கின்ற நிபந்தனையின்மீது வட்டமேஜை மகாநாட்டில் போய் கலந்துகொண்டார்கள் என்றால் தேசியத்தின் அயோக்கியத்தனத்துக்கும், சூழ்ச்சிக்கும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்பது நமக்குத் தோன்றவில்லை.

பழய பழக்க வழக்கங்களையும், மதக்கொள்கைகளையும், வர்ணாசிரமத்தையும் காப்பாற்றும் விஷயத்தில் வெள்ளைக்கார அரசர்கள் அசார்சமாய் இருந்துவிடுவார்கள் என்கின்ற கருத்துக்கொண்டே காங்-

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

குடி அரசு

1946-ஆம் ஆகஸ்டு-மீ 24உ

# வங்காளக் கலவரம்

இந்தியாவெங்கும் ஆகஸ்டு 16ந் தேதி முஸ்லிம்களின் பல நூற்றுக்கணக்கான பொதுக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் 5,000, 10,000, 50,000 மக்கள் கொண்ட கூட்டங்களாகக்கூடி இருக்கின்றன. இந்தப் பொதுக் கூட்டங்களானவை இந்தியா முழுவதிலுமுள்ள முஸ்லிம்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் ஏற்பட்ட அதிருப்தியையும் குறைகளையுங்காட்டி அவற்றை நிவர்த்தித்துக்கொள்ளுவதற்கான காரியங்களைச் செய்வதற்கு முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் 100க்கு 99 பேர்களுக்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் இஷ்டப்படுகிறார்களா? தயாராய் இருக்கிறார்களா? அப்பணியில் அவர்கள் இறங்குவதால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களை அடையத் தயாராய் இருக்கிறார்களா? என்பதை அச்சமூக ஸ்தாபனமும், தலைவர்களும் அறிந்துகொள்ளுவதற்காக வேண்டிகொண்டு பரீட்சைபார்க்கக்கூட்டப்பட்ட கூட்டங்களாகும். தங்கள் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ள முஸ்லிம்கள் ஆற்றப் போகும் பணி என்னவென்றால், காங்கரஸ்காரர்கள் இதுவரை "மகாத்மாவின் தலைமையில், அஹிம்சாமூர்த்தியின் தலைமையில், சத்தியத்தையும் அன்பையும் தனது இருமூச்சாககொண்ட சர்வாதிகாரவக தலைவர் தலைமையில்" என்ன என்ன காரியங்களைச் செய்தார்களோ, செய்ததன் மூலமாக வெற்றிபெற்றார்களோ அவற்றைத்தான் செய்வது என்று முடிவு செய்துகொண்டார்கள் என்பதுதான். மற்றபடி வேறு எதையும் புதிதாக அல்லது புதுமாதிரியாகச் செய்யப்போவதாக எவ்விதத் திட்டமும் போட்டுக்கொள்ளவில்லை. எனவே இப்படிப்பட்ட காரியத்திற்காக முஸ்லிம் மக்கள் கருத்தை அறிய ஏற்பாடுசெய்யப்பட்ட 16ந் தேதி கூட்டங்கள் இந்தியாவெங்கும் நடந்ததில் பெரிதும் வங்காளம் (கல்கத்தா) தவிர மற்ற பாகங்களில் மிக அமைதியாகவும் பெரும்பாலான இடங்களில் முஸ்லிம் அல்லாத மக்களுடைய கூட்டுறவுடனும், ஒத்துழைப்புடனும் எவ்விதமுணுமுணுப்புக்கூட இல்லாமலும் திருப்திகரமாய் நடந்திருக்கின்றன. முஸ்லிம் அல்லாத பல பிரமுகர்கள் அக்கூட்டங்களில் பேசியுமிருக்கிறார்கள். ஆனால் வங்காளத்தில் மாத்திரம் கலவரம், கொலை, கொள்ளை, குத்து, வெட்டு, நாசம், தீவைப்பு, பெண்களை மானபங்கம் செய்வது முதலிய காரியங்களும் நடந்திருக்கின்றன. இக்கலவரத்தின் பயனாய் 4000, 5000 பேர்கள்வரை செத்திருப்பார்கள் என்றும் 15000, 20000 பேர்கள் வரை காயம்பட்டு, சிகிச்சை செய்யப்படவேண்டியவர்களாய் இருக்கிறார்கள் என்றும், நான்கு, ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் நாசமாகி இருக்கும் என்றும், மற்றும் ஏதேதோ அட்டூழியங்கள் நடந்ததாகவும் சொல்லப்படுகிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் 42ம் வருடம் ஆகஸ்டு 8ந் தேதி காங்கரஸ்காரர்கள் செய்த தீர்மானத்தால் என்னென்ன காரியங்கள் நாடு முழுமையும் நடந்ததோ, எவ்வளவு கஷ்டநஷ்டமேற்பட்டதோ அதே காரியங்களும் கஷ்டநஷ்டங்களும் ஒரே ஒரு இடத்தில் மாத்திரம் நடந்ததாகச் சொல்லலாம், அன்றியும் அதைவிட இது அதிக மோசமாக நடக்கவில்லையென்றும் சொல்லலாம்.

ஆகவே இந்த நாட்டில் எந்த வகுப்பாரானாலும், எந்தக் கட்சியாரானாலும் தாங்கள் கருதிய, இஷ்டம் ஆசை சித்திபெறவேண்டுமானால் அதற்காகச் செய்யப்படவேண்டிய காரியங்களில் இம்மாதிரியான குழப்பம், கொள்ளை, கொலை, ரிகார்டுகளுக்கும் ஆபீசுகளுக்கும் தீ வைப்பு, கட்டிடங்களை இடித்தல் இந்திய அதிகாரிகளைக் கொல்லுதல் முதலிய கேடுவேலை, நாசவேலை, செய்யவேண்டும். அல்லது அம்மாதிரி கேடுகள் சம்பவிக்கும் என்பது உறுதியும் தவிர்க்கமுடியாததுமாகஆகிவிட்டதை எவரும் மறுக்கமுடியுமா என்பதோடு அதைக் குற்றம் சொல்லாதவர்கள் இதையும் குற்றம் சொல்லமுடியாது என்போம். இந்த உயிர்ச்சேதமும், சொத்துக்கள் நாசமும், தொல்லையும் துன்பமும் முன் நடந்த ஆகஸ்டு கலவரத்திலானாலும், சென்ற வாரம் நடந்த வங்காளக் கலவரத்திலானாலும் இந்திய மக்களுடைய சொத்தும் உயிரும் மானமும் சேதமாகி இந்திய மக்கள்தான் தொல்லைப்பட்டார்கள் என்று முடிவேற்பட்டதே ஒழிய பிரிட்டிஷ் மக்கள் சொத்துக்கோ, உயிருக்கோ அவர்களது நலனுக்கோ எவ்விதக்கேடும் தடையும் ஏற்பட்டதாகச் சொல்வதற்கு இடமில்லை. விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் காங்கரசின் 42ம்-வருட ஆகஸ்டு தீர்மானமும், முஸ்லிம் லீகின் 46ம்-வருட ஆகஸ்டு

தீர்மானமும் இந்திய மக்களோடு போராட்டம் என்று இல்லாமல் பிரிட்டிஷாரோடு போராட்டம் என்று சொல்லியே தீர்மானம் செய்து அந்த எண்ணத்தின்மீதே போராட்டம் நடந்தும் (முஸ்லிம்மக்களின் இஷ்டத்தை அறியமாத்திரம் கூட்டம் கூட்டியும்) பலன் என்னவென்றால் பிரிட்டிஷ்காரர்களுக்கோ அவர்களுடைய சொத்து, பெண்டு, பிள்ளை ஆகியவர்களுக்கோ எவ்வித கெடுதியும் நட்டமும் துன்பமும் ஏற்படாமல் சகல கெட்ட பலனும் இந்தியமக்களுக்கும் இந்தியர்களது சொத்துக்களுக்குமே ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதிலிருந்து நாம் கொள்ள வேண்டியது என்னவென்றால் இந்திய அரசியல் பிரச்சினை என்பது இந்திய உள்நாட்டு மக்களின் போராட்டப் பிரச்சினையே அல்லாமல் இந்தியர்-பிரிட்டிஷார் ஆகிய இருவர்களின் பிரச்சினையே அல்ல என்பதேயாகும்.

உள்நாட்டுப் பிரச்சினை என்பதுங்கூட சுலபத்தில், நேரிய முறையில், ராஜியில் அல்லது பஞ்சாயத்தில் தீரும்படியாக இன்று இல்லை என்பது நன்றாய் விளங்கிவிட்டது.

ஏன் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் வெள்ளையன் தானாகவே இந்தியரிடம் வந்து "நான் வெளியே போகிறேன், உங்கள் நாட்டை நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள்" என்று உண்மையாகவே அதுவும் காந்தியாரும் காங்கரஸ்காரர்களும் ஜின்னா சாயபும் மற்றவர்களும் நம்பும்படியான அளவுக்குச் சொல்லியும், அப்படிச் சொல்லப்பட்டதை இந்தியர்கள் நம்பியும், இந்தியர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் ஒருவர்மீது ஒருவர் சந்தேகப்பட்டு வெள்ளையன் வெளியேறாதபடி முட்டுக்கட்டை போடுகிறார்கள். தேசத்துரோகம் செய்கிறார்கள் என்று ஒருவருக்கொருவர் தங்களவர்களையே வைதுக்கொள்ளுவது என்றால் இது உள்நாட்டுக் கலகமா அல்லவா என்று கேட்கிறோம். வெள்ளையர்கள் இங்குவந்து 3 மாதம் காத்திருந்தும் ஒத்துப்போக முடியாமல் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் இந்த உள்நாட்டுக் கலகம் என்பது எப்படியாவது ஒரு வழியில் பைசலாகாதவரையில் வெள்ளையன் உண்மையிலேயே வெளியேறுவதானாலும் பிரமாதமான நலம், சாந்தி எதுவும் ஏற்பட்டுவிடாது என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

உண்மையில் பார்த்தால் கல்கத்தா கலவரமானது அரசியல் கலவரமென்று சொல்லவே முடியாது என்போம். அதை இந்து முஸ்லிம் கலவரம், வகுப்பு கலவரம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த (வங்காள) மாகாணம் காங்கரஸ் ஜனநாயக முறைப்படி பார்த்தால் முஸ்லிம் மாகாணம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் முஸ்லிம்கள்தான் அங்கு மெஜாரிட்டியானவர்கள். மற்றவர்கள் மைனாரிட்டி என்பதோடு அந்த மைனாரிட்டியும், பல ஜாதி, பல பிரிவு கொண்ட மிகவும் சிறுசிறு மைனாரிட்டிகள் சேர்ந்தது என்றே சொல்லலாம். இப்படிப்பட்ட மைனாரிட்டி கூட்டம் அந்நாட்டு ஆட்சிகங்கள் ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் என்று சொன்னால் அது கைபலத்தைத் தவிர வேறொன்றினாலும் முடியாத காரியமாகும். அதற்குக் கைபலம் தவிர வேறு நியாயம் இருக்கவும் முடியாது.

பகுத்தறிவோடு பேசுவோமானால் இந்தியாவிலுள்ள பல்வேறு மத ஜாதி வகுப்பு மக்களில் மெஜாரிட்டியான ஒரு சமுதாயம் எது இருக்கிறது? என்றால் அது இந்திய முஸ்லிம் சமுதாயமே ஆகும். முஸ்லிம் சமுதாயம் ஒரு மதம், ஒரு ஜாதி, ஒரு இன உணர்ச்சி, ஒரு கடவுள், ஒரு வேதம், ஒரே கட்டுப்பாடு, - அரசியல், மத இயல், சமுதாய இயல், ஒரே லட்சியம் கொண்டதாகும் என்பதோடு சற்றேறக்குறைய இப்படிப்பட்ட 10-கோடி மக்களையும் கொண்ட சமுதாயமாகும். அந்தப்படி இந்தியாவில் வேறு ஒரு சமுதாயம் ஏதாவது இருக்கிறதாக யாராவது காட்டமுடியுமா? சொல்லமுடியுமா? என்று கேட்கிறோம்; மேலும் பஞ்சமர்கள் தீண்டப்படாதவர்கள், இழிஜாதியார் என்று இந்து சாஸ்திரத்திலும், இந்து சட்டத்திலும் சொல்லப்படுவதாலேயே இந்தியர்களில் 6-கோடி ஷெட்யூல் (தீண்டப்படாத) மக்கள் தங்களை இந்துக்கள் அல்ல என்று சொல்லுகிறார்கள். அது போலவே ஏராளமான மக்கள் 4வது ஜாதியார், அடிமைகள், சூத்திரர்கள், தாழ்ந்த ஜாதியார் என்று சாஸ்திரமும் இந்து(லா) சட்டமும் சொல்லுவதாலேயே மானமுள்ள திராவிடமக்கள் யாவரும் தங்களை இந்துக்கள் அல்ல என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்து முஸ்லிம் கலகம் ஒழிந்தால் மற்றும் (சூத்திரர்கள்) அநேகர் தங்களை இந்து என்று சொல்லிக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்லலாம். மற்றும் பலர் வேறு வேறு காரணங்களால் சீக்கியர், பார்சி, கிறிஸ்தவர், மலைவாசிகள் முதலிய தலைப்பில் இருந்து கொண்டு தங்களை இந்துக்கள் அல்லாதவர்கள் என்று சொல்லிக்கொண்டு இருப்பதோடு காங்கரஸ் ஸ்தாபனத்துக்கு வெளியிலும் இருக்கிறார்கள். இந்தப்படி உண்மையான

கணக்குப் பார்த்தோமேயானால் காங்கரஸ் ஸ்தாபனம் என்பது ஒரு மைனாரிட்டி ஸ்தாபனம் என்பது மாத்திரமல்லாமல் இந்து என்கின்ற சமுதாயக்காரர்களும் இந்தியாவுக்கு மைனாரிட்டி சமுதாயக்காரர்களேயாவார்கள்.

இப்படிப்பட்ட மைனாரிட்டி சமுதாயமாகிய இந்து சமுதாயம் என்பது பார்ப்பனர்கள் (ஆரியர்கள்) சூட்சியால், அவர்கள் அமைத்துக்கொண்ட பத்திரிகை, பணம், கட்டுப்பாடான பிரச்சாரம், மனிதாபிமான பொறுப்பற்ற, கவலையற்ற தன்மை ஆகியவைகளைக் கொண்டு நினைத்த காரியத்தை செய்து யாருக்கும் எப்படிப்பட்டவர்களுக்கும் தொல்லையும் கேடும் செய்யும்படியான சக்திபெற்று அதில் உள்ளவர்கள் நன்றாய் வாழும் வாய்ப்பு பெற்றுவிட்டதாலேயே அது மெஜாரிட்டி சமுதாயமாகிவிடுமா? அல்லது காங்கரஸ் மெஜாரிட்டி மக்களின் பிரதிநிதி ஸ்தாபனமாகி விடுமா? என்று கேட்கிறோம்.

ஆரிய பார்ப்பனர்களின் கொடுமையால் புராணக் கற்பனைப்போன்ற அவர்களது இரக்கமற்ற, ஈரமற்ற, சுயநல அட்டூழியங்களால், சூட்சிகளால் இன்று இந்தியாவில சக்தி வாய்ந்த ஸ்தாபனமாகக் காங்கரஸ் சொல்லப்படுகிறது என்பது அல்லாமல் பிரதிநிதித்துவ உரிமையோ மெஜாரிட்டி பலமோ அதற்குச் சிறிதும் இல்லை என்பதைப் பந்தயம் கட்டி எங்கும் ருஜூப்பிக்க யாராலும் முடியும்.

இவைகளை யெல்லாம்விட காங்கரஸ்காரர்களும் ஆரியர்களும் சக்திவாய்ந்தவர்களாக இருக்க மற்றொரு முக்கியமான காரணம் என்னவென்றால் பிரிட்டிஷாரின் அந்தரங்கமான உதவியாகும். எப்படியெனில் பிரிட்டிஷாருக்கு முஸ்லீம்கள் ஜென்ம விரோதிகள், மத விரோதிகள், அரசியல் விரோதிகள். அதுபோலவே திராவிட மக்களும், ஆதிதிராவிட மக்களும் பிரிட்டிஷாருக்கு விரோதிகள். ஏன் என்றால் பிரிட்டிஷார் கைப்பற்றிய இந்தியா என்பது இவ்விரு சமுதாயத்தாரிடமிருந்தே கைப்பற்றியதாகும். இவ்விரு சமுகத்தாரே பிரிட்டிஷாரால் பிற்படுத்தப்பட்டு தாழ்த்தப்பட்டவர்களாவார்கள். இதற்குப் பெரிதும் காட்டிக்கொடுத்தவர்களும், பங்காளிகளாய் இருப்பவர்களும் ஆரியர்களேயாகும். ஆதலால் பிரிட்டிஷார் இந்தியாவில் இருக்கும்வரை முஸ்லிம்களுக்கும் திராவிடர்களுக்கும் எதிரிகளாகவும் எஜமானர்களாகவும் ஆரியர்களுக்கு நன்றி விஸ்வாசிகளாகவும் இருக்கவேண்டியவர்கள் ஆவார்கள். அந்தக் காரணங்களால்தான் ஒரு மிக மைனாரிட்டி பிரதிநிதித்துவமுள்ள காங்கரசையும், ஆரியர்களையும் பிரிட்டிஷார் ஆதரித்தும் ஆமோதித்தும் மற்ற உண்மையான மெஜாரிட்டி சமுதாயத்தை, மெஜாரிட்டி பிரதிநிதித்துவமுள்ள ஸ்தாபனத்தை அலட்சியப்படுத்தியும், சிறுமைப்படுத்தியும் வருகிறார்கள்.

இந்தக் காரணங்களால்தான் இந்திய அரசியலானது உள்நாட்டுக் கலவரமாகவும், கையில் பலத்தவர்கள் காரியமாகவும் ஆய்விட்டது. இது இவ்வளவோடு முடிந்துவிடும் என்று முடிவு செய்ய முடியாதென்றே சொல்லுவோம். வெள்ளையர்களோ ஆரியர்களோ உயிர்ச்சேதமோ சொத்து நட்டமோ, அடி உதையோ படும்படியான தன்மை ஏற்படும்வரை இம்மாதிரி ஆகஸ்டு கலவரமும், வங்காளக் குழப்பமும் நடக்காமலிருக்கும் என்றோ, தடுக்கப்படும் என்றோ கருத முடியாதென்றே சொல்லுவோம். வங்காளக் குழப்பமும், ஆகஸ்டு கலவரமும் ஆரியருக்கோ பிரிட்டிஷாருக்கோ ஒரு நட்டமும் கஷ்டமும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆதலால் வெள்ளையர் வெளியேறிவிட்டாலும் ஆரியர்கள் இந்தியாவைவிட்டு ஒழிகிறவரையில் அல்லது அவர்களது சூட்சிகள் பலவீனப்பட்டு செல்லாததாகப் போகும் வரையில் அடிக்கடி ஆகஸ்டு 8ந் தேதியும், வங்காளக் குழப்பமும் கலவரமும் நாம் எதிர்பார்க்க வேண்டியதுதான். வங்காள குழப்பத்தால் இந்துக்கள் உயிருக்கும் சொத்துக்கும் அதிக நட்டமா? அல்லது முஸ்லிம்கள் சொத்துக்கும் உயிருக்கும் அதிக நட்டமா என்பது சரியாகத் தெரியவில்லை. எப்படியிருந்தாலும் ஆரியருக்கும் பிரிட்டிஷாருக்கும் அனேகமாய் சிறிதுகூட இருக்காதென்றே சொல்லலாம். இதை ஏன் சொல்லுகிறோமென்றால் கலவரம் குழப்பம் என்பது ஏற்பட்டால் அடிக்கிறவன் அடிபடுகிறவன், கொல்லுகிறவன் கொல்லப்படுகிறவன் கொள்ளை அடிக்கிறவன் கொள்ளை அடிக்கப்படுகிறவன் யாவரும் இந்நாட்டு மக்கள், இந்நாட்டுப் பழங்குடி மக்கள், இந்நாட்டை ஆண்ட இன மக்களாகவே இருப்பவர்கள். இவற்றால் பயனடைகிறவர்கள் (மேற்கண்டவர்கள் அல்லாத) ஆரியர்களும் பிரிட்டிஷார்களுமாகவே இருப்பார்கள் என்பது உறுதி. ஆதலால் வங்காளம் (வங்காள கலவரத் தன்மை) சென்னை மாகாணத்தில் தலைகாட்டவிடக்கூடாது என்று திராவிட மக்களுக்கு எச்சரிக்கை செய்வதற்கேயாகும்.

வங்காளத்தில் செத்தவர்கள், அடிபட்டவர்கள், நட்டப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்றே வைத்துக்கொண்டாலும் அவர்

களுக்கு இது ஒரு பிரமாதமான நட்டமல்ல என்றே சொல்லுவோம். ஏனெனில் கட்டுப்பாடும் வீரமும் மானமும் மன உறுதியும் மத வெறியும் உள்ள 10-கோடி மக்களில் 4000, அல்லது 5000 பேர் செத்துப்போய் விட்டதால் பெரிய நட்டம் ஒன்றும் ஏற்பட்டு விடாது. மீதி 9,99,95,000 மக்கள் இருப்பார்கள் என்பதோடு இவர்களுக்கு அந்த செத்துப்போன 5000 மக்களுடைய வீரமும் துணிவும் ஒன்றுக்கு இரண்டாக ஏற்றப்பட்டிருக்கும் என்பதை இந்துக்கள் என்பவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

காங்கரஸ்காரர்களும் காங்கரஸ் பத்திரிகைக்காரர்களும் தந்திரமான பிரசாரம் செய்து நம் திராவிட நாட்டிலும் வங்காளம் போன்ற குழப்பத்தை உண்டாக்க முயற்சிப்பார்கள், முயற்சித்தும் வருகிறார்கள். காங்கரசில் பல பைத்தியக்கார திராவிட மக்கள் தங்கள் தோள்கள் தினவெடுப்பதாகக் கருதிக்கொண்டு தங்களுக்கும் வங்காள சம்பவ வாய்ப்பு கிடைக்காதா என்று கருதுபவர்களாக இருக்கக் கூடும். அது சுத்த முட்டாள் தனமான காரியமாகும். இங்கு உள்ள முஸ்லிம்கள் திராவிட மக்கள் ஆவார்கள் என்பதோடு திராவிடர்களோடு நேசமாக இருப்பவர்கள் ஆவார்கள். திராவிட கழகத்தாரும் யாவரும் திராவிட மக்கள் என்பதோடு முஸ்லிம்களோடு நேசமாக இருப்பவர்கள். ஆதிதிராவிடர்களும் திராவிட மக்கள் ஆவார்கள். அவர்களும் நேசமாய் இருப்பவர்கள். ஆதலால் கலகம் குழப்பம் இங்கு ஏற்படுமானால் திராவிடர்கள்தான் திராவிடர்களோடு போராடி அடி தின்னவும் உயிர் இறக்கவும் சொத்து நட்டப்படவும் ஏற்படுமே தவிர மேலே கூறியதுபோல் ஆரியருக்கோ பிரிட்டிஷாருக்கோ ஒன்றும் நட்டம் ஏற்பட்டுவிடாது. அதுமாத்திரமல்லாமல் கலவரத்தால் சாவர்ல் விவகாரத்தால் ஆரியருக்கு ஏராளமான லாபமும் அரசியல் ஆதிக்கமும் உண்டாகும். பிரகாசங்களும், கிரிகளும், ஆச்சாரிகளும், கரந்துகளும் தான் பதவி, ஏராளமான லாபம், அவர்களது இனநலம் முதலிய பயன்கள் அடைய முடியும். நம்மவர்களுக்கும் ஏதாவது கிடைக்காதா என்றால், ஆரியர்களுக்கு 4பங்கு நலம் கிடைத்தால் நமக்கு அரைப்பங்கு கிடைக்கும். அதை அவர்களுக்கு ஏராளமாகவும் 100க்கு 50பேர்களுக்கு கிடைத்ததுபோலும் நமக்கு 100க்கு 2பேர்கள்3பேர்களுக்குக் கிடைத்ததுபோலும்தான் ஆகும். இந்த இரண்டுபேர் மூன்று பேருக்கு ஏதோ கிடைப்பதும் இவர்கள் அதற்காக நம்மைக் காட்டிக்கொடுத்து நமக்குத் தொல்லை விளைவிப்பதற்குப் பத்தில் ஒரு பங்குகூட சரியாக ஆகிவிடாது என்பதோடு அதிகமானபேர்களுக்குக் கேடு, நட்டம் ஏற்படும்.

ஆகவே திராவிடர்கள் இம்மாதிரி குழப்பங்களில் ஈடுபட்டு இனியும் சூத்திரர்களாய் இருக்க இடம் கொடுக்காமல் இதுமுதலாவது இந்த நாட்டு சொந்தக்காரராக, ஆளும் ஜாதியாராக அயலானுக்கு அடிமையாக இல்லாதவராக, மனிதராக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். திராவிடர் இந்த நிலை எய்துவதற்கு ஆரிய ஆதிக்கம் அடியோடு எல்லாத் துறையிலும் ஒழிக்கப்பட வேண்டுமே ஒழிய முஸ்லிம்களோடு போராடுவதல்ல; நாம் ஒருவருக்கொருவர் போராடுவதல்ல என்பதை வலியுறுத்திக் கூறுவோம்.

விளக்கமாகவும் தெளிவாகவும் ஒன்று சொல்லுவோம். அதாவது முஸ்லிம்களோ திராவிட கழகத்தார்களோ வெள்ளையனை வினாடி நேரம்கூட இங்கு இருக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் அல்ல. விரும்பப்பட வேண்டியவர்களும் அல்ல. நம்மைப் பொருத்தவரையில் நாம் (திராவிட கழகத்தார்) கூறுவோம். அதாவது வெள்ளையன் இருந்த இடத்தில் திராவிடர்கள்தான் அமர வேண்டும், ஆரியர்கள் வேண்டுமானால் "ஆத்மார்த்தத்தில்" இருந்துகொண்டு "மோட்சத்திற்கு" வழி காட்டட்டும். அதை நம்பி போகிறவர்கள் நன்றாய்ப்போகட்டும். நமக்கு சிறிதும் ஆட்சேபணை இல்லை. ஆனால் ஆரியன் ஆளுபவனாய் நம் நாட்டில் ஆரியாசனத்தில் இருப்பவனாய், அதிகாரியாய், இருக்கக்கூடாது என்பதுதான்.

இதை காங்கரஸ் திராவிடர்கள் சிந்திப்பார்களாக. கம்யூனிஸ்ட் (பட்சியுமல்லாத—மிருகமுமல்லாத வெளவால்) தோழர்களும் சிந்திப்பார்களாக.

நல்லகாலம் பிறக்கப்போகிறது. ஆனால் அதை அடைய நமக்குப் புத்தியும் மானமும் முன்னிற்கவேண்டும்.

## மதிப்புரை

"புரட்சிக்கவி தந்த புதையல்"— இந்நூல் திருவத்திபுரம் தோழர் மாவண்ணா தேவராசன் அவர்களால் ஆக்கப்பட்டது. வீழ்ச்சியுற்ற இனத்தை வீறுகொண்டெழச் செய்வதற்கெனவே உலகிற்றோன்றிய புரட்சிப் புலவர்களில் தலைசிறந்தவரான புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஆக்கிய பாக்களைச் சுவைத்துப் படித்ததினாற் பெற்ற இன்பத்தைப் பாக்களாகத் திரட்டி யாவரும் நுகரும் வண்ணம் "புரட்சிக்கவி தந்த புதையலி"ல் தோழர் தேவராசன் அவர்கள் ஈந்துள்ளார்கள். யாவரும் படித்தின்புறுதற்குரியது. விலை நான்கணாதான். கிடைக்குமிடம்: ஸ்ரீ இலட்சுமி நூல் பதிப்பகம், திருவத்திபுரம்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

...கிரசுக்காரர்கள் அம்மாநாட்டுக்குச் சென்றார்கள் என்றும், நமது நாட்டுப் பார்ப்பனர்கள் இந்திய ஆட்சியில் கருப்பு சமஸ்தானாதிபதிகளையும் கொண்டுவந்து கலக்கினதுமான காரியங்கள் செய்தார்கள் என்றும் இந்திய ஏழை மக்கள், தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் கிளர்ச்சிகள் வலுத்துவிடுமேயானால் அதை அடக்க அதிக சிரமப்பட்டு நாம் ஏன் கெட்டபேரை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கருதி கருப்பு சமஸ்தானபதிகள் மூலமே அடக்கச்செய்யலாம் என்கின்ற சூழ்ச்சியின் மீதே பிரிட்டிஷாரும் இந்த தந்திரம் செய்திருக்கிறார்கள் என்றும்தான் நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. எப்படியிருந்தபோதிலும் பிரிட்டிஷ் முதலாளித் தன்மை ஆட்சியும், அவர்களது ஏகாதிபத்திய ஆணவமும் ஒழிவதற்குமுன் இந்த இந்திய சமஸ்தான முதலாளித் தன்மை ஆட்சியும், அவர்களது பொறுப்பற்ற கொடுங்கோன்மை கூடா ஒழுக்க ஆட்சியும் அழிந்து மறைந்து ஒழியவேண்டியது அவசரமும் அவசியமுமான காரியமாகும், என்பதே நமதபிப்பிராயம். அப்படி இருக்க இப்போது அவர்களையும் சமஸ்தானங்களையும் காப்பாற்ற புதிதாக ஒரு சட்டம் செய்வது மிகமிகக் கொடுமையான காரியம் என்றே சொல்லுவதுடன் இச்சட்டம் அச்சமஸ்தானாதிபதிகளை இன்னமும் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று சொல்லி (லைசென்சு) அனுமதிச்சீட்டு கொடுத்தது போலவும் ஆகிறது என்பதே நமதபிப்பிராயம்.

## தேசியத் தாளின் பித்தலாட்டம்

19-8-46ம் நாள் பாரததேவியின் 4வது பக்கத்தில் 4வது பத்தியில் "துறையூரில் கருஞ்சட்டைப்படையினரின் கலாட்டா" "யாக குண்டங்களை அழித்தனர்" என்ற தலைப்பிட்டு, 10-8-46ல் தொடங்கிய வருண ஜபத்தில் ஜெபம் செய்த பிராமணர்களைக் கருஞ்சட்டையினர் மதிமையீனமாகப் பேசினர் என்றும், சிவன் கோவில் சிலைகளை உடைத்தெறிந்தனர் என்றும், இரண்டு இடங்களுக்குத் தீ வைத்தனரென்றும், 50 பேர் கொண்ட கருஞ்சட்டையினர் கூட்டம் சத்திரத்தில் காலட்சேபம் நடந்த இடத்தில் கலாட்டா செய்ததென்றும், காங்கிரஸ் கூட்டத்தில் சச்சரவு உண்டாக்கித் தலைவரையும், சொற்பொழிவாளர் இராசகோபாலனையும் காயப்படுத்தினரென்றும், பப்ளிக் ரேடியோ உடைக்கப்பட்டதென்றும், நான்கு கருஞ்சட்டையினர் கலவரத்தின் காரணமாய் போலீசாரால் கைதுசெய்யப்பட்டனரென்றும் எழுதப்பட்டிருந்தது. மேற்கூறிய அறிக்கை ஆள்பெயரின்றி வெளிவந்துள்ளது. ஆனால் உள்ளபடியே மேற்கண்ட நிகழ்ச்சிகளில் ஒன்றுமே துறையூரில் நடைபெறவில்லை என்று திராவிடர் கழகத்தின் சார்பில் கழகச்செயலாளர் து. மா. பெரியசாமி அறிவிக்கின்றார்.

## கோலாலம்பூரில் திராவிடர் கழகம்

4-8-46 ஞாயிறன்று மாலை 5 மணிக்குக் கோலாலம்பூர் சொராக் ரோடு தமிழர் சீர்திருத்தச் சங்கத்தில் தோழர் ஆ. அப்சமத்து அவர்களின் தலைமையில் கூடிய கூட்டத்தில் திராவிடர் கழகம் நிறுவவேண்டியதின் இன்றியமையாமை வற்புறுத்தலால் பேசப்பட்ட பின்னர் 'தமிழர் சீர்திருத்த சங்கம்' பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் விருப்பப்படி "திராவிடர் கழகம்" என மாற்றி அமைக்கப்பட்டது. இக்கழக அமைப்புக்கூட்டத்திற்குச் சிங்கப்பூர், ஈப்போ, கிள்ளான், காப்பார், பந்திங் முதலிய இடங்களிலிருந்து பல தோழர்கள் வந்திருந்தனர். பல சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் வாயிலாகவும், பல தோழர்களிடமிருந்து முடங்கல்கள் வாயிலாகவும் கழகத்திற்கு ஆதரவு காட்டப்பட்டது.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மேற்கண்ட கழகத்திற்கு "திராவிடர் கழகம் அமைக்கப்படவேண்டியதின் இன்றியமையாமையையும், திராவிடர் கழகக் கொள்கைகளையும், குறிக்கோளையும் விளக்கியும், தன் முழு ஆதரவைக் காட்டியும் முடங்கல் எழுதி அனுப்பியிருந்தார்கள்.

தலைவர் தன் முடிவுரையில் திராவிடர் கழகக்கொள்கைகளை விளக்கி மலேயாவில் பல திராவிடர் கழகங்கள் அமைக்கப்படவேண்டுமென்றும், திராவிடர்கள் யாவரும் திராவிடர் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேரவேண்டுமென்றும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களையும், மற்றும் பல அறிஞர்களையும் மலேயாவிற்கு அழைத்து மக்களுக்கு ஊக்கமளித்து உற்சாகமூட்ட வேண்டுமென்றும், இவை யாவற்றிற்கும் எல்லோரின் ஒத்துழைப்பும் தேவையென்றும் பேசினர்.

மேலும் மலேயாவின் எப்பகுதியில் திராவிடர் கழகம் அமைப்பதாயிருப்பினும் கோலாலம்பூர் திராவிடர் கழகத்திற்குச் செய்தியனுப்பினால் தக்க ஆதரவும், வசதியும் அளிக்கப்படுமென்று மலேயே திராவிடத் தோழர்களுக்கு அறிவிப்பதாகவும் கூறினார்.

பின்னர் செயலாளர் தோழர் மருதமுத்து அவர்களின் நன்றிகூறலுக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

## இப்பக்கச் செய்திகள்

18-8-46 மாலை 7 மணிக்கு ஈரோடு காரைவாய்க்கால் மைதானத்தில் திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுகாலை தோழர் க. அன்பழகன் எம். ஏ., அவர்களும், புலவர் கி. தியாகராசன், எஸ். அப்பாவு, மு. சுப்பையன், அ. மு. அபிபுல்லா ஆகிய தோழர்களும் தற்கால அரசியல் நிலைமை குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். பொன்மலை இரயில்வே தொழிலாளர் நிதிக்குக் கூட்டத்தில் ரூ 19-5-0 வசூல்செய்து உரிமையாளரிடம் கொடுக்கப்பட்டது.

0 0

13-8-46ல் ஈரோடு வள்ளுவர் தெருவில் திராவிடர்கழகத்தின் சார்பில் தோழர் இப்றாகிம் அவர்கள் தலைமையில் இரவு $8\frac{1}{2}$ மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புலவர் தியாகராசன் திராவிடர் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். எஸ். அப்பாவு, சுப்பையன், அபிபுல்லா ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.